முதலாவது அனைத்துலகத் தமிழியல்

# ஆய்வு மாநாடு 2020

## "வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்"



**ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு**

தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# முதலாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு 2020

## "வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்"

### ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு

**பதிப்பாசிரியர்கள்**
பேராசிரியர். ம. இரகுநாதன்
திரு. ஈ. குமரன்
திரு. க. அருந்தாகரன்

10, 11 ஜனவரி 2020
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | “தமிழியல் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு” |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாசிரியர்கள் | : | பேராசிரியர். ம. இரகுநாதன் |
| | | திரு. ஈ. குமரன் |
| | | திரு. க. அருந்தாகரன் |
| முதற்பதிப்பு | : | 10 ஜனவரி 2020 |
| வெளியிடுவோர் | : | தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், |
| | | யாழ்ப்பாணம், இலங்கை. |
| பக்க அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | 829 |
| அச்சிட்டோர் | : | கரிகணன் (தனியார்) நிறுவனம், |
| | | இல. 672B, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| ISBN | : | 978-955-44441-3-3 |

# ஈழத்துத் தலபுராணங்கள் புலப்படுத்தும் பொருளியற் சிந்தனைகள்.

**கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்,**
இந்து நாகரிகத்துறை,
இந்துக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
*ssrimuralitharan@yahoo.com*

**ஆய்வுச்சுருக்கம்**

'சிவபூமி' என்று திருமூலரால் போற்றப்பட்ட ஈழத்திருநாட்டிலுள்ள சிவாலயங்கள் மீதெழுந்த சைவத்தமிழ் இலக்கியங்களில் தலபுராணங்கள் முக்கிய இடம்பெறுகின்றன. தலபுராணங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் பற்றிய கோயிற் பண்பாட்டை சிறப்பாகப் புலப்படுத்துவது மட்டுமன்றி சைவப்பண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களையும் விரித்துரைக்கின்றன. மனிதகுல மேம்பாட்டை வளர்த்தெடுக்கக்கூடிய பல்வேறு பொருளாதார சிந்தனைகளை விரித்துரைக்கும் நூல்களாக தலபுராணங்கள் விளங்குகின்றன எனும் கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வானது விபரண ஆய்வுமுறையியல், வரலாற்று ஆய்வுமுறையியலில் நிகழ்த்தப்படுகின்றது. ஈழத்தில் கி.பி 14ஆம் நூற்றாண்டு தொடக்கம் 20ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தை எல்லையாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது. இக்காலப்பகுதிக்குள் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், திருக்கரைசை, நகுலேச்சரம், ஈழத்துச்சிதம்பரம், நல்லூர் ஸ்ரீகைலாஸநாத ஆலயம் முதலிய ஆறு சிவாலயங்கள் மீதும் ஒன்பது தலபுராணங்கள் தோன்றியுள்ளன. இவ்வொன்பது தலபுராணங்களுமே ஆய்வின் மூலங்களாக அமைந்துள்ளன. ஈழத்துத்தலபுராணங்கள் புலப்படுத்தும் பொருளியற் சிந்தனைகளை வெளிக்கொண்டுவருவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள் :** தலபுராணம், பொருளியல், விவசாயம், வாணிபம்,.

**ஆய்வு அறிமுகம்**

சைவப்பண்பாட்டை வளம்படுத்தியுள்ள பண்பாட்டு மூலங்களுள் தலபுராணங்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. சைவப்பண்பாட்டின் கருவூலங்களாக விளங்கும் மகாபுராணங்களின் வழித்தடத்திலேயே தமிழிலும் தலபுராணங்கள் தோற்றம் பெற்றுள்ளன. தலபுராணங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் பற்றிய கோயிற் பண்பாட்டைக்